Virtual Schools

பெப்ரவரி 2021

TDSBஇன் மெய்நிகர் இரண்டாம்நிலைப் பாடசாலைக் குடும்பத்தவர்களுக்கான செய்திமடல்

தொடர்ந்து நாம் அனைவரும் சவாலான இந்தக் காலகட்டத்தில் பயணித்துக் கொண்டிருக்கும் வேளையில், குடும்ப தினத்துடன் கூடிய வார இறுதி நாட்களை மகிழ்வுடன் களிக்கவும் சற்று ஓய்வெடுக்கவும் ஒன்றாக இனிதே இருக்கவும் ஒவ்வொருவருக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கும் என நாங்கள் நம்புகின்றோம்.

3ம் காலாண்டுத் தவணை தற்போது நடைபெற்று வருவதுடன் ஏப்ரல் 22 ம் திகதி முடிவடையும். 4ம் காலாண்டுத் தவணை ஏப்ரல் 23 ம் திகதி ஆரம்பமாகி ஜூன் 28 ம் திகதி முடிவடையும்.

மெய்நிகர் இரண்டாம்நிலைப் பாடசாலை மாணவர்களும் பணியாளர்களும் தொடர்ந்து சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றனர், அத்துடன் ஒவ்வொரு மாதமும் கடந்து செல்லும்போது, வகுப்பறைகளில் கற்றலுக்கான புதிய மற்றும் ஆக்கபூர்வமான கற்றல் செயற்பாடுகள் இடம்பெறுவதை நாங்கள் கேள்விப்படுகின்றோம்.

மேலதிக தகவல்கள் மற்றும் அண்மித்த தகவல்களுக்குத் தயவுசெய்து பார்வையிடுங்கள்: www.tdsb.on.ca/virtualschool அத்துடன், பின்தொடருங்கள் Twitter @tdsbvs.

## COVIDஐ சமாளித்தல்

உலகளாவிய இந்த நோய்த் தொற்றுப் பரவலின்போது மனநல ஆரோக்கியம் மற்றும் உடல்நலத்திற்கு உதவுவதற்கான சமாளிக்கும் உத்திகள் பற்றி அறிவதற்கும் அவை பற்றி உரையாடுவதற்குமென பெற்றோரும் பராமரிப்பு வழங்குபவர்களும் பெப்ரவரி 11 அன்று TDSB மனநல ஆரோக்கிய நிபுணர்களுடன் இணைந்தனர். இந்த நேரடி நிகழ்வைத் தவறவிட்டோர், இணைய ஒளிபரப்புப் பதிவு ஒன்றை இங்கே பார்க்கவும்.

## முன்பதிவின்றி மெய்நிகர் நிகழ்சிகளுக்கு எங்களுடன் இணையுங்கள்!

TDSB தொழில்சார் ஆதரவுச் சேவைகளிலுள்ள பணியாளருடன் நேரடியாக இணையுங்கள். உங்களுடைய பிள்ளையின் அல்லது பதின்மவயதுப் பிள்ளையின் மனநலம் மற்றும் நல்வாழ்வுக்கு எவ்வாறு ஆதரவு வழங்கலாம் என்பது பற்றிய கேள்விகள் கேட்பதுடன் அவற்றுக்கான பதில்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

- செவ்வாய்க்கிழமைகளில் காலை 10:00 - 11:00
- வியாழக்கிழமைகளில் இரவு 7:00 - 8:00

## மாணவர்கள் மற்றும் பெற்றோர்/பராமரிப்பு வழங்குநர்களுக்கு புதிய குடிவரவாளர்களுக்கான ஆதரவுகள்

பாடசாலைகளிலுள்ள குடியமர்வு பணியாளர்கள் (SWIS), SEPT எனவும் அழைக்கப்படுபவர்கள், புதிதாக வந்துள்ள குடும்பங்களுக்கும் பாடசாலையின் satellite மற்றும் வரவேற்பு மையங்களிலுள்ள மாணவர்களுக்கும் குடியமர்வுச் சேவைகளை வழங்குகின்றனர். பங்கேற்பாளர்கள் கல்வி முறையை விளங்கிகொண்டு வெற்றிகரமாக நிலைமாறுவதற்கும் குடியமர்வு செயல்முறையை துரிதப்படுத்துவதற்கும் உதவும் தனிப்பட்ட/குடும்ப சேவைகளை அல்லது குழு செயல்திட்டங்களை குடியமர்வு பணியாளர்கள் வழங்குகின்றனர்.

குடியமர்வு ஆதரவுகளுக்கு, தயவுசெய்து பார்வையிடுங்கள்: www.tdsb.on.ca/New-to-Canada/Settlement-Workers.

## மார்ச் விடுமுறை திகதிகளில் மாற்றம்

பொதுச் சுகாதார அதிகாரிகளின் ஆலோசனையின்பேரில், சமூகத்தில் COVID-19 பரவுதலைத் குறைப்பதற்கு உதவும்பொருட்டு மார்ச் விடுமுறையை கல்வி அமைச்சு தாமதப்படுத்தியுள்ளது. இந்த விடுமுறை **ஏப்ரல் 12 – 16, 2021** ஆக இருக்கும்.

## சுய சேவை கடவுச்சொல் மீளமைப்பு

பெப்ரவரி 17, புதன்கிழமை அன்று, மெய்நிகர் பாடசாலைப் பணியாளர்களும் மாணவர்களும் தமது சொந்த TDSB கடவுச் சொல்லைத் துரிதமாகவும் இலகுவாகவும் மீளமைக்க உதவும் பொருட்டு ஒரு புதிய சுய சேவை கடவுச்சொல் மீளமைப்புக் கருவியை தகவல் தொழில்நுட்பப் பிரிவு (IT) ஆரம்பித்து வைத்தது.

இந்தப் புதிய முயற்சி ஆரம்பிக்கப்பட்டு 3 நாட்களுக்குள், 96%க்கும் மேற்பட்ட பணியாளர்களும் மாணவர்களும் இந்த சுய சேவை கடவுச்சொல் மீளமைப்புக் கருவிக்காகப் பதிவுசெய்துள்ளனார்.

நல்ல செய்தி என்னவென்றால், கிட்டத்தட்ட அனைத்து மெய்நிகர் இரண்டாம்நிலைப் பாடசாலை (VSS) பணியாளர்களும் மாணவர்களும் தற்போது, Brightspace, Zoom, myINFO ஆகிய எதுவாக இருந்தாலும், தமது சொந்த கடவுச்சொல்லை உட்செல்லும் (login) இடத்திலேயே மீளமைக்கக் கூடியதாக இருக்கும். பணியாளர்/தொழில்நுட்ப (IT) இடையீடு தேவையில்லை.

Virtual Schools



## TDSB ஆபிரிக்க மரபுத் திங்களைக் கொண்டாடுகின்றது

பெப்ரவரி மாதத்தில், ஆபிரிக்க மரபுத் திங்களை அங்கீகரித்து அதனைக் கொண்டாடுவதில் ரொறன்ரோ மாவட்ட கல்விச் சபை பெருமிதமடைகின்றது. ஆபிரிக்க வம்சாவளி மக்கள் கனடாவுக்கும் இந்த உலகுக்கும் செய்த பல சாதனைகளையும் பங்களிப்புகளையும் கொண்டாடுவதற்கான ஒரு தருணம் இதுவாகும். 2020-2021 ஆம் ஆண்டுக்குரிய தெரிவுசெய்யப்பட்ட கருப்பொருள் ***Kujichagulia: சுய உறுதிப்பாடு*** ஆகும். மேலும் அறிக

## TDSB சீன மரபுத் திங்களைக் கொண்டாடுகின்றது

ரொறன்ரோ மாவட்டக் கல்விச் சபை சீன மரபுத் திங்களை (CHM) பெப்ரவரி மாதத்தில் அங்கீகரிப்பதில் பெருமிதமடைகின்றது. இந்த வருடம் ***எருது வருடமாகும்: விசுவாசம், நேர்மை, பொறுப்பு, கடின உழைப்பு மற்றும் பகுத்தறிவு.*** சந்திரப் புத்தாண்டு என்பது வசந்தகால விழா என்றும் அழைக்கப்படுகிறது, அத்துடன் இது சந்திர நாட்காட்டியின்படி சந்திரன் முதலில் தோன்றி 15 நாட்கள் கழித்து வரும் சந்திர நாட்காட்டியின் முதலாவது பூரணை தினத்தன்று முடிவடைகிறது. மேலும் அறிக.

## விசேட கல்வி பற்றிய அண்மித்த தகவல்கள்

மெய்நிகர் இரண்டாம்நிலைப் பாடசாலையில்(VSS) இலேசான கல்வியறிவு குறைபாடு (MID) அல்லது விருத்திக் குறைபாட்டுத் தீவிர ஆதரவு (DD ISP) வகுப்புகளில் சேர்க்கப்படுவதற்கு ஆர்வமுள்ள குடும்பத்தினர் முதலில் தமது வீட்டுக்கு அண்மித்த பாடசாலையுடன் தொடர்புகொள்ளவேண்டும். மெய்நிகர் இரண்டாம்நிலை பாடசாலையின் விசேட கல்விப் பிரிவு அதிபர்களில் ஒருவரை அந்த வீட்டுப் பாடசாலை நிர்வாகத்தின் அங்கத்தவர் ஒருவர் தொடர்புகொள்வார். அனைத்துக் கோரிக்கைகளும் கருத்திலெடுக்கப்படும், ஆனால் வகுப்பின் அளவு வரையறைகள் மற்றும் தர நிலையின் அடிப்படையில் அவை மட்டுப்படுத்தப்படலாம்.

வீட்டுப் பாடசாலைகள் வருகை தொடர்பிலான பிரச்சினைகள், PSSPக்கான தேவை, ILPS மற்றும் IEPS உருவாக்கத்தைக் கையாள்வதற்காக VSS தமது மாணவர்களுக்காக பாடசாலையில் ஆதரவுக் குழு/மாணவர் ஆதரவுக் குழு (IST/SST) சந்திப்புகளைத் தொடர்ந்து நடாத்தவேண்டும்.

மார்ச் 1, 2021 அன்று இரவு 7 மணிக்கு அடுத்த விசேட கல்வி ஆலோசனைக் குழு கூட்டத்தில் இணையுங்கள். மேலும் அறிக.

## மெய்நிகர் நூலக ஆதாரவளங்கள்

வீட்டிலிருந்து கற்கும்போது TDSB வழங்கும் இலத்திரனியல் புத்தகங்கள், கலைக்களஞ்சியங்கள், வீடியோக்கள் மற்றும் ஏனைய தகவல்களை மாணவர்களால் அணுகமுடியும் என்பது உங்களுக்குத் தெரியுமா?

TDSB மெய்நிகர் நூலகத்தில் மாணவர்கள் கற்பதற்கு ஆதரவளிப்பதற்காக கவனமாகத் தெரிவுசெய்யப்பட்ட, எந்நேரமும் எங்கிருந்தும் அணுகக்கூடிய எண்ணிம ஆதாரவளங்கள் உள்ளன.

பின்வருவனவற்றை மாணவர்கள் கண்டறிவதற்கு உதவுவதற்காக மெய்நிகர் நூலகம் வடிவமைக்கப்பட்டுள்ளது:

- **பாடத்திட்டத்துடன் தொடர்புடைய இணையவழி ஆதாரவளங்கள்/உதவிகள் - பாலர் வகுப்பு முதல் தரம்12 வரை** கற்போருக்கு செயல்திட்டங்கள் மற்றும் வீட்டுப்பாட வேலைகளில் உதவுவதற்கும், வாசிப்பதை ஊக்குவிப்பதற்கும் பார்வையிடுவதற்குமென பல்வேறு வடிவங்களில் இலத்திரனியல் புத்தகங்கள், தரவுத்தளக் கட்டுரைகள், ஊடக ஒளிபரப்புகள், மற்றும் இணையக் கருவிகள் (Read Watch Learn and Find என்பதைப் பார்வையிடுங்கள்)

- ஆராய்ச்சி, கணிதப் பயிற்சி, விளையாட்டுகள், வீட்டுப்பாட வேலைகளில் **உதவுவதற்கான பாடங்களுடன் தொடர்புடைய வலைய இணைப்புகள்** (Find என்பதைப் பார்வையிடுங்கள்)

- **கேட்டறிதல்** அல்லது **ஆராய்ச்சி செயல்திட்டம்** ஒன்றைத் தொடங்குவதற்கான ஆதாரவளங்கள் (Inquiry and Find என்பதைப் பார்வையிடுங்கள்)

- வாசித்தலுக்கான ஆலோசனைகள் மற்றும் **புத்தகங்கள் பற்றிய மாணவரது கருத்துரைகள்** ('Read and Just Read It' என்பதைப் பார்வையிடுங்கள்)

மெய்நிகர் நூலகத்தை www.tdsb.on.ca/library என்ற வலைத்தளத்தில் அல்லது உங்களுடைய பாடசாலையின் வலைப்பக்கம் அல்லது மாணவருக்கான உங்களுடைய Brightspace வகுப்பறையூடாகத் தேடிப்பாருங்கள்.

வீட்டில் மாணவர்களுடன் சேர்ந்து மெய்நிகர் நூலகத்தை எப்படிப் பயன்படுத்துவது என்பது பற்றிய மேலதிக தகவல்களுக்கு, Parent என்ற buttonஐ இடதுபக்க toolbarஇல் தேடிப்பாருங்கள்.

மெய்நிகர் நூலக ஆதாரவளங்கள் பலவற்றை வீட்டிலிருந்து அணுகுவதற்காகத் தயவுசெய்து உங்களுடைய பிள்ளையின் ஆசிரியரிடம் மெய்நிகர் நூலக கடவுச்சொல் தகவல்கள் பக்கம் ஒன்றைக் கேளுங்கள்.

## மெய்நிகர் Co-op செயற்திட்டங்கள்

இந்தக் காலாண்டுத் தவணையில் 2-சித்திகள் கிடைக்கப்பெறும் Co-op செயற்திட்டங்களில், பணி அமர்த்தல் கோரிக்கைகள் மற்றும் பரந்துபட்ட பல்வேறு ஆர்வங்கள் கொண்ட 300க்கும் மேற்பட்ட எமது மாணவர்கள் பங்கேற்கின்றனர். மாணவர்களை மெய்நிகர் வழியில் செயற்பட வைத்திருப்பதில் ஆசிரியர்கள் வெற்றிகண்டுள்ளனர், அத்துடன் ஒரு சிலவற்றைப் பெயரிட்டுக் கூறுவதாயின், அவர்கள் பல்மருத்துவர்கள், இணைய விளம்பரதாரர்கள், ஆரம்பநிலை வகுப்பறை ஆசிரியர்கள், உட்புற வடிவமைப்பாளர்கள், மென்பொருள் சோதனையாளர்கள், நிகழ்வுகள் திட்டமிடுபவர்கள், கட்டிடக் கலைஞர்கள் மற்றும் நீண்டகாலப் பராமரிப்பு இல்லங்களில் பணிபுரிகின்றனர்.

மாணவர்கள் தமது தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சித் திறன்களை மேம்படுத்தும் அதேவேளையில் மெய்நிகர் சூழல் ஒன்றில் பணிபுரியும் உலகம் பற்றிக் கற்றுக்கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு ஆர்வமுள்ள துறையில் பெறுமதிமிக்க தொழில்ரீதியான தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டும் இருக்கின்றார்கள், அத்துடன் ஒவ்வொரு நாளும் தம்மைப்பற்றி மேலும் அறிந்துகொள்கின்றனர்!

## கணினி அறிவியல் பற்றிய அண்மித்த தகவல்கள்

கணினி அறிவியல் பிரிவின் 3ம் காலாண்டுத் தவணை 20 க்கும் மேற்பட்ட வகுப்புகளுடன் ஆரம்பமானது, அத்துடன் பல மாணவர்களும் ஆசிரியர்களும் அவர்களுடைய தொழில்களிலும் வாழ்விலும் பயன்படக்கூடிய சிக்கல் தீர்க்கும் மற்றும் நெறிமுறை வடிவமைப்புத் திறன்களை விருத்தியடையச் செய்வதற்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கும் உலகப் புகழ்பெற்ற Waterloo கனேடிய கணினி போட்டிக்குத் (Waterloo Canadian Computing Competition) தயார்செய்து கொண்டிருக்கின்றனர்.

பெப்ரவரி 17 ம் திகதி 100 க்குச் சற்றுக் குறைவான எண்ணிக்கையிலான மாணவர்கள் போட்டிப் பரீட்சையை எழுதினர் எனவும், பல கணினி வகுப்புக்களுடனும் கணினி கழகத்துடனும் போட்டிக்குத் தயார் செய்தல் ஒன்றிணைக்கப்பட்டது என்பதிலும் நாங்கள் பெருமிதமடைகின்றோம். போட்டிக்கு அப்பால், மாணவர்கள் நிஜ உலக நிரலாக்க மொழிகளான ஜாவா, Python மற்றும் Javascript போன்றவற்றிலும், அத்துடன் சில விளையாட்டு வடிமைப்பு மற்றும் APP உருவாக்கத்தில் உள்ள சிக்கல்களை எவ்வாறு தீர்ப்பது என்பது பற்றியும் கற்றுக்கொண்டிருகின்றனர். பாடசாலை ஆண்டின் இரண்டாம் பகுதியில் யதார்த்தமான சிக்கல்களுக்கு புதுமையான தீர்வுகளைக் கண்டுபிடிக்க மாணவர்களுக்குத் தொடர்ந்து உதவுவதற்கு நாங்கள் ஆவலுடன் காத்திருக்கின்றோம்!

## மெய்நிகர் இரண்டாம்நிலைப் பாடசாலை (VSS) கறுப்பின மாணவர் கூட்டணி (BSA)

கறுப்பின மக்கள் வரலாற்று மாதத்துக்கென ஒரு மன்றம் வேண்டும் என்று VSS மாணவர்கள் விரும்பியதால் அவர்களின் முன்னெடுப்புடன் VSS கறுப்பின மாணவர் கூட்டணி 2020 இலையுதிர் காலத்தில் ஆசிரியர்களுடன் இணைந்து ஆரம்பிக்கப்பட்டது. மாணவர்களது குரல் மற்றும் ஆதரவு இணைந்து ஒரு கறுப்பின மாணவர் கூட்டணி (BSA) உருவாவதற்கு வழிவகுத்தது. தற்போது 100 மாணவ அங்கத்தவர்களுக்கு மேல் இருக்கும் கூகுள் வகுப்பறையைப் பயன்படுத்தி ஒரு BSA சமூகத்தை உருவாக்குவதற்கு இதில் ஆசிரிய ஆலோசகர்கள் மாணவர்களுடன் இணைந்து பணியாற்றினர்.

கல்வி பயில்வோரது ஒரு துடிதுடிப்பான அமைப்பாக BSA வளர்ந்துள்ளது (VSS மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகள் உள்ளடங்கலாக). BSA மாணவர்களில் ஒருவரான Tiyana Alvarado-Rennie, TDSB பூராவும் இடம்பெற்ற, zoom சந்திப்பு மற்றும் விளக்கக்காட்சியின்போது தனது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார்: *ஆபிரிக்க மரபுத் திங்கள் BSA கருத்தரங்கு: மெய்நிகர் கறுப்பின மாணவர் கூட்டணி ஒன்றை உருவாக்குவது எப்படி?* தகவல்கள், மாணவர்கள் தயாரிப்பில் உருவாக்கப்பட்ட வீடியோக்கள், நிகழ்வுகள், மற்றும் podcasts (இணைய ஒலிபரப்புக்கள்) ஆகியவற்றைப் பகிர்ந்துகொள்வதற்கு மாணவர்களை ஊக்குவிக்கும் ஒரு வலைத்தளத்தையும் VSS BSA தொடக்கிவைத்துள்ளனர்: https://sites.google.com/tdsb.on.ca/vss-black-student-alliance/home.

Tiyana மாணவர் கருத்துப்பதிவு தளமொன்றையும் உருவாக்கியுள்ளார்: https://sites.google.com/student.tdsb.on.ca/virtualschoolblackhistorymonth/home.

VSS சூழலில் BSA மாணவர்கள், நிகழ்வுகள் குழு, அறிவிப்புக் குழு மற்றும் மன்றக் குழு போன்ற செயற்குழுக்களில் தலைமைத்துவத் திறன்களைப் பெற்றிருக்கிறார்கள். தொடரும் சந்திப்புக்கள் மற்றும் கலந்துரையாடல்கள், அழைக்கப்பட்ட பேச்சாளர்கள், விளக்கக்காட்சிகள் மற்றும் கறுப்பின-எதிர்ப்பு இனவெறிக்கு சவால்

விடுக்கும் முன்னெடுப்புகள் போன்றவற்றை உள்ளடக்குவதுடன், சமத்துவம், உள்ளடக்குதல், கறுப்பினத்தவரின் சிறப்புத்தன்மை, மற்றும் மாணவர் வெற்றி, மாணவர் குரல், மற்றும் ஆதரிக்கும் போக்குக்கான TDSB இன் அர்ப்பணிப்பை மேலும் மேம்படுத்த உதவும். BSA கறுப்பினத்தவர்களுக்காகத் தொடர்ந்து குரலெழுப்புவதுடன் கறுப்பின அடையாளங்களுக்கெதிரான பல்வேறு பாகுபாடுகளையும் ஆராயும்.

BSA என்பது குறைவாகப் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட குரல்களின் ஒரு நட்புரீதியான அமைப்பாகவும் இருக்கிறது. மிக அண்மையில், "பாலினம் மாறிக்கொண்டிருக்கும் கறுப்பினத்தவர் மற்றும் மாற்றுப் பாலின வரலாறு" என்ற தலைப்பில் LeRoi Newbold மற்றும் Twsyed Miyake-Mugler உடன் இணைந்து மதிய உணவு நேர நிகழ்வொன்றில் நாங்கள் VSS GSA யுடன் பங்காளிகளாகச் சேர்ந்தோம். பாலினம் மாறிக்கொண்டிருக்கும் கறுப்பினத்தவர் மற்றும் மாற்றுப் பாலின வரலாறு, கலாச்சாரம் மற்றும் நடனம் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்புகள் பற்றி அங்கு கலந்துரையாடப்பட்டது.

கறுப்பின மாணவர்களை VSS BSA தொடர்ந்து வலுவூட்டுவதுடன், மெய்நிகர் பாடசாலை சூழலில் மாணவர் தலைமை, குரல் மற்றும் ஆதரவை கறுப்பின மாணவர்கள் மத்தியில் கட்டி எழுப்பக்கூடிய பாதுகாப்பான, மேலும் அரவணைக்கும் ஒழுங்கமைப்புகளை உருவாக்கும்.

## VSS பாலினம் மற்றும் பாலியல் கூட்டணி

மெய்நிகர் இரண்டாம்நிலை பாடசாலை பாலினம் மற்றும் பாலியல் கூட்டணி (VSS GSA) மாணவர்களுக்குத் தொடர்ந்தும் சந்தர்ப்பங்களை வழங்குகின்றது. நாங்கள் 2020 ஐ ஒரு குளிர்கால உற்சாகப்படுத்தல் ஒன்றுகூடலுடன் முடிவுக்குக் கொண்டுவந்ததுடன் 2021 ஐ வரவேற்கும் கூட்டம் ஒன்றுடன் மீண்டும் ஆரம்பித்தோம். இதுவரை நாங்கள் Planned Parenthood Toronto (திட்டமிடப்பட்ட பெற்றோர் நிலை ரொறன்ரோ) இலிருந்து அழைக்கப்பட்ட பேச்சாளார் ஒருவருடன் பாலின கல்வி கேள்வி & பதில் அமர்வு ஒன்றையும் நடத்தியுள்ளோம்.

GSA க்குள் வியக்கத்தக்க வேலை செய்யும் வாரத்திற்கு ஒரு முறை தொடர்ந்தது சந்திக்கும் 11 சுறுசுறுப்பாக இயங்கும் குழுக்கள் எங்களிடம் உள்ளன. சுவரொட்டிகள், இலச்சினைகள், மற்றும் t-shirts உள்ளடங்கலாக பல செயற்திட்டங்களில் கலைக்குழு பணியாற்றிக்கொண்டிருக்கின்றது. மாற்றுத்திறனாளி மாணவர் குழுவில், மாற்றுத்திறனாளிகளுக்கெதிரான பாரபட்சத்தைக் களைவதற்கு ஆதரவான ஒரு சூழலை மாணவர்கள் காண்கின்றனர்.

மத நம்பிக்கை/மதம் சார்ந்த குழுக்கள் மதம் மற்றும் பன்முக இனம் மற்றும் பாலியல் அடையாளங்களுடன் கூடிய அவர்களது மத செயல்முறைகளின் வேறுபட்ட பிரிவுகள் பற்றிக் கலந்துரையாடுவதற்குப் பாதுகாப்பானதும் கவனம் செலுத்துவதற்கும் ஏற்ற இடங்களுக்கான தேவை பற்றி ஆராய்ந்து வருகின்றது.

பெண் என அடையாளம்காணும் குழு (Fem Group) என்பது அவர்கள் அனைவரும் தமது விருப்பங்களையும் ஆர்வங்களையும் பகிர்ந்துகொள்வதற்கான ஒரு குழுவாகும். கேள்விக்குரிய குழு என்பது மாணவர்கள் தங்களைத் தாங்களே அடையாளப்படுத்த வேண்டிய தேவையற்ற ஒரு ஒழுங்கமைப்பாகும். நிறம் சார்ந்த அணியிலுள்ள மாணவர்கள் வாராந்த கலந்துரையாடலைத் தேர்ந்தெடுப்பதுடன் அவர்களால் சமூகத்தைக் கட்டியெழுப்பவும் ஆதாரவளங்களைப் பகிர்ந்து கொள்ளக் கூடியதாகவும் இருக்கின்றது. மெய்நிகர் பாடசாலையில் அவர்கள் காணவிரும்பும் மாற்றங்கள் பற்றி மாற்றுப்பாலினம்/இருமை அல்லாதவர்/மாறிக்கொண்டிருக்கும் பாலினத்தவர் குழு கலந்துரையாடிவருகின்றது.

மெய்நிகர் பாடசாலை, COVD-19, மாற்றமடைந்துவரும் பாலினம் மற்றும் மாற்றுப்பாலின வெறுப்பின் அழுத்தத்தைக் கடந்து செல்வதற்கான திறன்களை வளர்ப்பதற்கு நல்வாழ்வு குழு மாணவர்களுக்கு உதவுகின்றது. விளையாட்டு அணி இசைப் பிரிவுகளை உள்ளடக்கும் Alternate Reality Game (ARG) ஒன்றில் கவனம் செலுத்தி வருகின்றது. முடிவாக, சமூக சீர்திருத்தக் குழு கறுப்பின வரலாற்று மாதத்தை முன்னிட்டு விசேட விருந்தினரான LeRoi Newbold மற்றும் Twysted Miyake-Mugler உடன் சேர்ந்து "பாலினம் மாறிக்கொண்டிருக்கும் கறுப்பினத்தவர் மற்றும் மாற்றுப் பாலின வரலாறு" என்ற தலைப்பில் ஒரு விளக்கக்காட்சியை வழங்கியது.

ஜூன் மாதத்தில் two-spirit மற்றும் மெய்நிகர் பெருமைக்குரிய வாரம் என்பதன் அர்த்தம் பற்றி ஒரு பட்டறை உள்ளடங்கலாக வருடத்தில் எஞ்சியிருக்கும் காலப்பகுதிக்கென VSS GSA இடம் ஏராளமான திட்டங்கள் இருக்கின்றன! மேலும் அறிய எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடுங்கள் அல்லது சமூக ஊடகங்களில் பின்தொடருங்கள் https://sites.google.com/tdsb.on.ca/vssgsa, @VSS_GSA (Twitter) மற்றும் @vss.gsa (Instagram).

Virtual Schools

பெப்ரவரி 2021

## ரொறன்ரோ சமூக குடியிருப்பு வசதி: எங்களுடைய பல்லின புலமைப் பரிசுத் திட்டத்தில் முதலீடுசெய்தல்

நீங்கள் இந்த வருடம் கல்வியைப் பூர்த்திசெய்கின்றீர்களா? இரண்டாம்நிலைப் பாடசாலைக்குப் பின்னரான கல்விக்கு பணம் தேவைப்படுகிறதா? கற்றல், புத்தகங்கள், உணவு, மற்றும் போக்குவரத்துக்கு மத்தியில் இரண்டாம்நிலைப் பாடசாலைக்குப் பின்னரான கல்விச் செலவை ஈடுசெய்வதற்கு நிதி பெற்றுக்கொள்வது பல மாணவர்களுக்குக் கடினமாக இருக்கலாம்.

எங்களுடைய பல்லின புலமைப் பரிசு (IIOD) பெறுவதற்கு இன்றே விண்ணப்பியுங்கள், அத்துடன் முழு நேர இரண்டாம்நிலை கல்விக்குப் பின்னரான கல்வி அல்லது பயிற்சிக்கான கல்விச் செலவு மற்றும் பாடசாலையுடன் தொடர்புடைய செலவுகளை ஈடுசெய்வதற்காக $4,000 வரை உங்களால் பெற்றுக்கொள்ளமுடியும்.

மேலதிக தகவல்களுக்கு, தயவுசெய்து பார்வையிடுங்கள்: https://www.torontohousing.ca/iiods.